இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 10-01-2025

# தமிழ்நாடு வளர்வதை ஆளுநர் விரும்புவாரா?

தமிழ்நாடு வளர்வதை ஆளுநர் ரவி விரும்பவில்லை. அதனால் தான் தனது உரையை வாசிக்க மனமில்லை. தேசிய கீதம் பாடப்படவில்லை என்று சொல்லிக் கொண்டு முறுக்கிக் கொள்வது எல்லாம் அவராகச் சொல்லிக் கொள்ளும் காரணங்கள் ஆகும்.

**ஆண்டின் தொடக்கத்தில் சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்ற வேண்டிய உரையை, தமிழ்நாடு அரசுதான் தயாரித்து அனுப்பும். அதனை அப்படியே வாசிக்க வேண்டியதுதான் ஆளுநரின் பொறுப்பு. தமிழ்நாடு அரசால் அனுப்பி வைக்கப்பட்ட உரையானது, தமிழ்நாடு எந்த வகையில் எல்லாம் வளர்ந்திருக்கிறது, வளர்ந்து சிறந்திருக்கிறது என்பதைச் சொல்வதாக அமைந்துள்ளது. இந்தியாவில் எந்த மாநிலமும் அடையாத வளர்ச்சியையும் மலர்ச்சியையும் தமிழ்நாடு அடைந்துள்ளது.**

எப்படியெல்லாம் தமிழ்நாடு வளர்ந்துள்ளது என்பது அந்த உரையில் இடம்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக இருக்கிறது.
2. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்ந்துவிட்டது.
3. பொருளாதாரக் குறியீடுகள் அனைத்திலும் தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது.
4. மருத்துவம், கல்வி, சமூக நலன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக இருக்கிறது.
5. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளது.
6. கட்டணமில்லாத மகளிர் விடியல் பயணமானது, மகளிரின் சேமிப்பை அதிகரித்துள்ளது. சமூகத்தில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்துள்ளது.
7. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பள்ளிக் குழந்தைகளின் பள்ளி வருகையை அதிகரித்துள்ளது. அவர்களது கவனிக்கும் திறனை மேம்படுத்தி உள்ளது.
8. புதுமைப் பெண் திட்டத்தால் மாணவியரின் உயர்கல்விச் சேர்க்கை அதிகரித்துள்ளது.
9. நான் முதல்வன் திட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி வழங்குவதால் இந்தியாவின் திறன்மிக்க இளைஞர்களின் தலைநகரமாக தமிழ்நாடு வளர்ந்துள்ளது. இதில் பயிற்சி பெற்ற 2.58 லட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பை உடனே பெற்றுள்ளார்கள்.
10. இந்தியாவில் வலிமைமிக்க விளையாட்டு மையமாக தமிழ்நாடு வளர்ந்துவிட்டது.
11. ஆண்டுதோறும் 15 லட்சம் பேர் உயர்சிகிச்சை பெற தமிழ்நாடு வரும் அளவுக்கு மருத்துவத் தலைநகராக தமிழ்நாடு திகழ்கிறது.
12. மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருதைப் பெற்றுள்ளது.
13. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் பன்முக வறுமைக் குறியீடுகளின் கீழ் 2.2 விழுக்காடு மக்கள் மட்டுமே ஏழைகளாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேசிய சராசரியான 14.96 விழுக்காட்டை விட மிகமிகக் குறைவு ஆகும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் வறுமையை முற்றிலுமாக ஒழிக்க முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை அரசு தொடங்க உள்ளது.
14. அமைதியான மாநிலமாக இருப்பதால் பணிபுரியும் பெண்கள் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்திய நாட்டின் மொத்தப் பெண் தொழில் பணியாளர்களில் 41 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர்.
15. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.10 லட்சம் கோடிக்கும் மேலான தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

– இப்படி தமிழ்நாடு வளர்வதை ‘நெகடிவ்’ ரத்தம் ஓடும் ஆர்.என்.ரவி எப்படி வாசிப்பார்?

தமிழ்நாடு எந்த வகையில் மேம்பட்டுள்ளது என்பதைப் போலவே, ஒன்றிய அரசின் புறக்கணிப்பும் இந்த உரையில் இருக்கிறது.

கல்வித் துறையில் மாநிலத்தின் முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு ஒத்துழைப்பைத் தருவது இல்லை. தமிழ்நாட்டுக்கான நிதியை ஒதுக்கவில்லை. புதிய கல்விக் கொள்கையை ஏற்கவில்லை என்று சொல்லி ஒன்றிய அரசு இந்த ஆண்டு எந்த நிதியையும் விடுவிக்கவில்லை. 2,152 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. ஒன்றிய அரசு நிதி வழங்காததால் மாநில அரசு தனது சொந்த நிதியில் இருந்து ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டிய நெருக்கடியைச் சந்திக்கிறது. கல்விக் கட்டணத்தையும் முறையாக திருப்பிச் செலுத்த முடியவில்லை. 44 லட்சம் மாணவர்கள், 2.2 லட்சம் ஆசிரியர்கள், 21 ஆயிரம் பணியாளர்களின் எதிர்காலத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

தேசிய பேரிடர் நிதியைத் தராமல் ஒன்றிய அரசு இழுத்தடித்து வருகிறது. 6,675 கோடி ரூபாயை உடனடியாக ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும் என்றும் ஆளுநர் உரையில் இருக்கிறது.

**தமிழ்நாடு எப்படி வளர்ந்துள்ளது என்பதை மட்டுமல்ல, வளரும் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு எப்படி வஞ்சிக்கிறது என்றும் இருக்கிறது. இந்த உரையை அவரால் எப்படி வாசிக்க முடியும்?**

பொதுவெளியில் தமிழ்நாடு அரசுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவரைப் போல பரப்புரை செய்து வருபவர் ஆளுநர் ரவி. ஒன்றிய அரசின் பிரதிநிதியாக இங்கு வந்து உட்கார்ந்திருக்கும் அவர் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு சிறுதுளி உதவி இருக்கிறாரா என்றால் இல்லை. நம்முடைய கோரிக்கைகளை ஒன்றிய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று வாங்கித் தருவதற்கு முயற்சி செய்திருக்க வேண்டும். அல்லது தடையாக இல்லாமலாவது இருக்க வேண்டும். உதவி செய்ய மாட்டேன், உபத்திரம் தான் செய்வேன் என்று உறுதிமொழி எடுத்து விட்டு வந்தவரிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

**சுயமரியாதை, சமூகநீதி, சமத்துவம், பகுத்தறிவுச் சிந்தனை, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் – ஆகிய சொற்கள் எல்லாம் அந்த உரையில் இருக்கிறது. இவை அனைத்தும் அவருக்கு கசக்குமே? ஆரிய விஷமுறிவுச் சொற்கள் அல்லவா இவை?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.1.2025) தலைமைச் செயலகத்தில், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ஆர். மகேஷ், கன்னியாகுமரி பேரூராட்சி தலைவர் ஸ்டீபன் மற்றும் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சந்தித்து, அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளி விழாவில் கன்னியாகுமரி பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உள்ளார்.

### குற்றவாளி யாராக இருந்தாலும் நேர்மையாக – நியாயமாக

# கடுமையாக நடவடிக்கை எடுத்து வருகிறது அரசு!

## பேரவையில் – அண்ணாநகர் பாலியல் வழக்கு தொடர்பாக – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

**சென்னை, ஜன. 10 -**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், அண்ணாநகரில் நடைபெற்ற பாலியல் சம்பவம் தொடர்பான வழக்கில் எடுக்கப்பட்ட கைது நடவடிக்கை குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நகரிலே நடைபெற்ற ஒரு சம்பவம் தொடர்பாக சில உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தையும் இங்கே நான் அளிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) வேல்முருகன், உட்காருங்கள். அதிலே வேல்முருகன் பெயரையும் இணைத்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நகர் வழக்கைப் பொறுத்தவரையில், பத்து வயது சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பாக அண்ணாநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர்களது உறவினரான இளஞ்சிறார் ஒருவர் கைது செய்யப்பட்டார். காவல் நிலையத்தில் விசாரணை அதிகாரி தங்களைத் தவறாக நடத்தியதாகவும், குற்றம் செய்த சதீஷ் என்பவரைக் கைது செய்யவில்லை என்றும் சிறுமியின் பெற்றோர் குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து, இவ்வழக்கு கோயம்பேடு அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு மாற்றப்பட்டது. அதன் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்படுகிற சதீஷும் கைது செய்யப்பட்டார். இந்நிலையில் மாண்பமை உயர்நீதி மன்றம் இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றியது.

இந்த உத்தரவை எதிர்த்து காவல்துறை செய்த மேல்முறையீட்டில் சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை என்ற முடிவிற்கு வந்த உச்சநீதிமன்றம், தமிழ்நாடு காவல் துறையிலிருந்தே மூன்று ஐ.பி.எஸ். அதிகாரிகள் கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழுவை நியமித்து விசாரிக்க உத்தரவிட்டது. உச்சநீதி மன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வுக் குழு இப்போது இந்த வழக்கில் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த 103வது வட்டச் செயலாளர் சுதாகர் என்பவரையும், பெண் காவல் ஆய்வாளர் ராஜீ என்பவரையும் நேற்று கைது செய்து, அவர்கள் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சுதாகர் அ.தி.மு.க.வில் வட்டச் செயலாளர் பொறுப்பில் இருக்கிறார். அவரையும் காவல்துறையினர் கைது செய்திருக்கிறார்கள். காவல் ஆய்வாளர் பொறுப்பில் இருக்கிற ஒருவரையும் கைது செய்திருக்கிறார்கள்.

நான் முன்பு விளக்கம் சொல்லிய சென்னை மாணவி வழக்கில் கைது செய்யப்பட்டவர் – நிச்சயமாக, உறுதியாகச் சொல்கிறேன். அவர் தி.மு.க.வில் உறுப்பினராக இல்லை. தி.மு.க. ஆதரவாளர். அதை நாங்கள் மறுக்கவில்லை. அமைச்சர்களுடன், அரசியல்வாதிகளுடன் புகைப்படம் எடுத்திருக்கலாம். அது தவறில்லை. ஆனால், யாராக இருந்தாலும், தி.மு.க.வினராக இருந்தாலும், நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் தி.மு.க. உறுப்பினர் அல்ல; தி.மு.க. அனுதாபி. அதுதான் உண்மை. எது எப்படியிருந்தாலும், குற்றவாளியை நாங்கள் காப்பாற்றவில்லை. உடனடியாகக் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளதோடு, குண்டர் சட்டத்திலும் அடைத்திருக்கிறோம். எனது அரசைப் பொறுத்த வரையில், எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்த தனிப்பட்ட நபராக இருந்தாலும் சரி, ஏன் காவல்துறையாக இருந்தாலும் சரி, பெண்களின் பாதுகாப்புதான் முக்கியமே தவிர, நாங்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகையால், எதிர்க்கட்சி நண்பர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, குற்றச் செயல் எதுவாக இருந்தாலும், குற்றவாளி யாராக இருந்தாலும், நேர்மையாக, நியாயமாக, கடுமையாக நடவடிக்கை எடுத்து வரும் இந்த அரசைக் குறை கூறாமல், பெண்களின் பாதுகாப்பிற்கு தங்களால் இயன்ற ஒத்துழைப்பை நீங்கள் அனைவரும் இந்த அரசுக்கு வழங்கிட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்துப் பேசினார்.

### கடலோரப் பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்து

# நிலத்தடி நீர் உவர் நீராவதைத் தடுக்க தடுப்பணைகள் கட்டப்படும்!

## சட்டப்பேரவையில் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, ஜன.10 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது பதிலளித்த நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், “கடலோரப் பகுதி கிராமங்களில் கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் உப்பு நீராவதைத் தடுக்க, தடுப்பணைகள் கட்டப்படும்” என அறிவித்தார்.**

சட்டப்பேரவையில் இதுதொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு : -

**ஆ.மு.முனிரத்தினம்:** சோளிங்கர் தொகுதி, காவேரிபாக்கம் தெற்கு ஒன்றியம், சங்கரம்பாடி கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், சங்கரம்பாடி கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் மற்றும் நிதிநிலைமைக் கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**ஆ.மு.முனிரத்தினம்:** சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட காவேரிபாக்கம் தெற்கு ஒன்றியம், சங்கரம்பாடி பாலாற்றின் குறுக்கே தடுப்பணை (check dam) கட்டித் தந்தால், அங்கு 1,600 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள 14,000 விவசாயிகள் பயன்பெறுவார்கள். 300க்கும் மேற்பட்ட கிணற்று நீர்ப் பாசனம் அதிகரிக்கும். எனவே, இந்த நிதியாண்டில் இந்தத் தடுப்பணையை முதலமைச்சர் அவர்களும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் ஒப்புதலோடு கட்டித் தர வேண்டும்

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் குறிப்பிட்ட அந்தத் தடுப்பணை பாலாற்றின் குறுக்கே 546 மீட்டர் நீளமும், 1.5 மீட்டர் உயரும், 16.46 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள ஒரு தடுப்பணை அமைக்க 20212022 ஆம் ஆண்டே முடிவு செய்யப்பட்டு, ரூபாய் 60 கோடி மதிப்பீடும் தயார் செய்யப்பட்டது. ஆனால் நிதி நிலைமை இடம் தரவில்லை. ஆகையினால், இந்த முறை நிதிநிலைமைக் கேற்பபரிசீலிக்கப்படும். நிதிநிலைமை இடம் தந்தால், உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும்.



**ஆ.மு.முனிரத்தினம்:** மேலும் சோளிங்கர் தொகுதி, நெமிலி ஒன்றியத்தில் உள்ள மகேந்திரவாடி ஏரியிலிருந்து வரும் உபரி நீர் கொசஸ்தலை ஆற்றின் வழியாக கடலில் சென்று கலக்கிறது. இதை தடுத்து, வெளிதாங்கிபுரம் என்ற இடத்தில் ஒரு தடுப்பணை கட்டினால், சுமார் 450 ஏக்கர் விவசாய நிலங்களின் விவசாயிகள் பயன்பெறுவார்கள். ஆகவே, இங்கும் ஒரு தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

**அமைச்சர் துரைமுருகன்:** ஏற்கெனவே ஏராளமான தடுப்பணைகள் உங்கள் ஊரில் இருக்கிறது. இந்த உத்தேச தடுப்பணைக்கு மேற்புறம் 11 கிலோ மீட்டர் தொலைவில் திருபாற் கடல்வளவனூர் இடையே 47.87 கோடி மதிப்பீட்டில் தரைகீழ் தடுப்பணை கட்டப்பட்டிருக்கிறது. தாங்கள் குறிப்பிடுகின்ற இந்தத் தடுப்பணைக்கு மேல்புறம் 20 மீட்டர் தொலைவில் பாலாறு அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டுகளை புனரமைக்க இந்த ஆண்டு 200 கோடி ரூபாய் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த உத்தேச தடுப்பணைக்கு கீழ்ப்புறம் 38 கிலோ மீட்டர் தொலைவில் பழையசீவரம் அருகே ஒரு தடுப்பணை இருக்கிறது. இருப்பினும் இத்தனை தடுப்பணைகளுக்கிடையே இந்தத் தடுப்பணையையும் கேட்கிறீர்கள். நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**மு.பன்னீர்செல்வம்:** மயிலாடுதுறை மாவட்டம், அளக்குடி கிராமத்திற்கும் கடலூர் மாவட்டம், திருக்கழிப்பாலை கிராமத்திற்கும் இடையில் கொள்ளிடம் ஆற்றில் கடல் நீர் உட்பு காவண்ணம் தடுப்பணை கட்டுகின்ற பணி நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்து வருகிறது. எனவே, அந்தப் பணி எப்போது நிறை வேற்றிக் கொடுக்கப்படும்.

**அமைச்சர் துரைமுருகன்:** நீண்ட நாட்களாக கட்டுகிறோம் என்று சொன்னால், அதை உறுதியாக கட்டுகிறோம் என்று பொருள். அது உள்ளபடியே விரைவில் கட்டப்படும்.

**ஆ.அருண்மொழிதேவன்:** கடலூர் மாவட்டம் வெள்ளாற்றில் கடல் நீர் உட்புகுந்து சேத்தியாத்தோப்பு, புவனகிரி பேரூராட்சி உட்பட, கிட்டத்தட்ட 25 கிராமங்கள் புவனகிரி, சிதம்பரம் வட்டங்களில் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் பயனற்ற நிலையில் உள்ளது. எனவே, ஆதிவராகநல்லூர் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தர அரசு முன்வருமா என்றும், மிக முக்கியமான இந்தப் பணியை ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தின் கீழ் நான் கேட்டிருக்கிறேன். அதிலும் பரிசீலனையில் உள்ளதாக தெரிவித்திருக்கிறீர்கள். இந்த ஆண்டு அந்தத் தடுப்பணை கட்டப்படுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** பொதுவாக கடலோரப் பகுதிகளிலெல்லாம் கடல் நீர் உட்புகுதியில் புகுந்து, குடிநீரை உப்பு நீராக மாற்றியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலிருந்து எல்லா பகுதிகளுக்கும், தற்போது ஒதுக்கியிருக்கிற இவர்கள் மாவட்டத்திற்கும் வந்திருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் அந்தத் தடுப்பணைக்குரிய விவரத்தை எழுதிக் கொடுத்தால், இந்த ஆண்டு நான் அதை அதிகாரிகளோடு கலந்து பேசி, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் 07.01.2025 அன்று சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 350வது வாரியக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய் மற்றும் வாரிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.